பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
**அர்ச்சனா**
**ஜுவலர்ஸ்**
176/1, நாவலர் வீதி.
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1504)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 08 செவ்வாய்க்கிழமை (20-02-2001) தொலைபேசி: 3378 ஒலி: 63

## மகஜர் கையளிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடைசெய்ய வேண்டுமென்று சிஹலஉறுமய தனது கைஎழுத்துமகஜரை நேற்று கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதுவரிடம் கையளித்துள்ளது.

விடுலைப்புலிகளைத் தடைசெய்வது தொடர்பாக பிரிட்டிஸ் உள்துறைஅமைச்சரே தீர்மானிப்பார் என்று பிரிட்டிஷ்தூதுவர் மகஜரை கையளித்தோரிடம் தெரிவித்துள்ளார். [வ]

# விடுதலைப் புலிகளை பிரித்தானிய அரசு தடைசெய்வதென்பது இலகுவான விடயமல்ல

## நீதியமைச்சர் பட்டிவீரக்கோன் பேட்டி

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பிரித்தானிய அரசு தடைசெய்வது இலகுவான காரியமல்லவென நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக நேற்றுபி.பி சி.யின் சந்தேசிய சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

பிரித்தானியா தடை செய்யும் அமைப்புக்களின் பட்டியலை இரண்டு விடயங்களின் அடிப்படையில் தயாரிக்க முடியும். அவ் வகையில்,

குறிப்பிட்ட அமைப்பு சர்வ

→ 8ஆம் பக்கம் பார்க்க

## புலிகளைத் தடைசெய்ய வேண்டாம் பிரித்தானிய பாராளுமன்றின் முன் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

# பட்டியல் வெளியிடப்படாமையால் சமாதானப்பேச்சிற்கு குந்தகமில்லை

## இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து

(லண்டன்)

பிரித்தானியஅரசினால் கொண்டுவரப்பட்டுள்ளபயங்கரவாதத்தடைச்சட்டத்தின் மூலம்தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பின் செயற்பாடுகள் பிரித்தானியாவில் முடக்கப்பட்டுவிடுமென எதிர்பார்த்திருந்த போதிலும், பிரித்தானி அரசு தயாரித்து வைத்துள்ள சர்வதேச பயங்கர வாத அமைப்புக்களின் பட்டியலை வெளியிடாமல் இருப்பது நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுப்பதாக அமையுமென பிரித்தானிய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சர்வதேச பயங்கரவாத அமைப்புகளைப் பிரித்தானியாவில் தடைசெய்வதற்கான சட்டமூலம் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதுஎன்ற செய்தியையடுத்து கடந்த ஒருமாத காலமாக புலிகளை பிரித்தானிய அரசு தடைசெய்யக்கூடாதென தமிழ் அரசியல் கட்சிகளும் மனிதநேயஅமைப்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பாராளுமன்றக்குழு நோர்வே செல்லும்

(கொழும்பு)

பத்துப்பேர் அடங்கிய பாராளுமன்றக் குழுவினர் இம் மாதம் 27 ஆம் திகதி நோர்வேக்குச் செல்லவுள்ளனர்.

நோர்வேக்குச் செல்லும் இத் தூதுக்குழுவினர் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக ஏற்பாடு செய்த கருத்தரங்கில்கலந்துகொள்ளவுள்ளனர்.

இப் பாராளுமன்றக் குழுவில் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் வவுனியா மாவட்ட எம். பியும் பிரதி அமைச்சருமான சுமதிபால,

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாத தடைச்சட்டம் பிரிட்டனில் நேற்று நிறைவேறியது

(லண்டன்)

பயங்கரவாத அமைப்புக்கள் பிரித்தானியாவைத் தளமாக பயன்படுத்துவதை தடுக்கும் நோக்கில் பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரித்தானியாவில் நேற்று அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இத் தடைச் சட்டத்தினுள் அடங்கும் பயங்கரவாத அமைப்புக்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்படாத போதிலும் உள்நாட்டு, வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட இச் சட்டத்தில் பின்வரும் விடயங்கள் அடங்குகின்றன.

★ பயங்கரவாதத்திற்கு துணைபோகும் வெளிநாட்டவர்கள் நீதி மன்றத்தில் நிறுத்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## தேசியப் பிரச்சினையில் தலையிடுவதை மகாசங்கம் நிறுத்திகொள்ள வேண்டும்

(கொழும்பு)

இலங்கையின் தேசியப்பிரச்சினைகளில் தலையிடுவதிலிருந்து, பௌத்த மகாசங்கம் விலகிக் கொள்ள வேண்டுமென்று நீதிக்கும் சமாதானத்துக்குமான உலக ஒருமைப்பாட்டு மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேசியப் பிரச்சினைகளில் மகா சங்கம் தலையிடுவதனால் பிரச்சினைகள் பெரிதாக்கப்படுகின்றன.

எனவே இதிலிருந்து சிறப்பான முடிவுகளைப் பெற மகாசங்கம் உதவ வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது. (இ)

## மட்டுபல்கலைக்கழகசமூகத்தின் பொங்குதமிழ் எழச்சிக்கு யாழ். பல்கலையும் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு பல்கலைக்கழகசமூகம்மேற்கொள்ளும்'' பொங்குதமிழ்'' எழுச்சி நிகழ்வுக்குஆதரவு தெரிவித்துஇன்று யாழ் பல்கலைக்கழக சமூகம் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்குமென்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் இடம் பெறும் இந் நிகழ்வு மதியம்12.00மணிக்கு சுதந்திர தீபம் ஏற்றுதலுடன் ஆரம்பமாகும். எழுச்சி நிகழ்வின் வெளிப்பாடாக எழுச்சிப் பாடல்களும் இசைக்கப்படும்.

சுதந்திரப்பிரகடனம்வாசிக்கப்பட்டதையடுத்து எழுச்சி

→ 8ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் பிரமுகர் சுதாவை சந்தித்த சமாதான குழு வவுனியா திரும்பியது!

(வவுனியா)

நல்லெண்ண விஷயத்தை மேற்கொண்டு இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திற்கு நேற்றுக் காலை சென்ற தென்னிலங்கை சமாதான மதக் குழுவினர் மடுத் திருப்பதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் சுதாவைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்திவிட்டு நேற்று வவுனியா திரும்பியுள்ளனர்.

இந்த சமாதான குழுவில் 18 பௌத்த பிக்குகள், 5 கத்தோலிக்க குருமார், மன்னார் இரத்தினபுரி மறை மாவட்ட ஆயர்கள் இடம் பெற்றிருந்தனர்.

வடக்கு கிழக்கு மாகாண சங்க நாயக்கர் சியம்பலகஸ்பவ விமலசார தேரர், கும்புறு சமுகே வஜிரதேரர் வட்டின

(8-ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ் மக்களின் உரிமைகளை விடுதலைப் புலிகளே வென்றெடுப்பர்

## வவுனியா வளாக மாணவர் கருத்து

(வவுனியா)

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் ஒரு தேச விடுதலை இயக்கமாக தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளையே கருதுகின்றனர், என யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் தமிழ் சர்வதேச ஊடகச் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டன் அரசு விடுதலைப் புலிகளைத் தடை செய்யுமாயின் இந்த இக்கட்டான சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கு அது இளைத்த பெரும் தவறாகவே நாம் கருத வேண்டியிருக்கும். தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க வேண்டிய தார்மீக பொறுப்பு பிரிட்டன் அரசுக்குண்டு.

1948 ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசு, இலங்கையின் சுதந்திரத்தை அனுமதித்த வேளை தமிழ் மக்களுக்கு பாரபட்சமாகவே ஆட்சி அதிகாரங்களை வழங்கிச் சென்றது.

இதனாலேயே தமிழ் மக்கள் ஆரம்பத்தில் சாத்வீக முறையில் போராட்டத்தை ஆரம்பித்தனர் இறுதியில் அது ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. எனவே தமிழர்களின் உரிமைக்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளைப் பிரித்தானிய அரசு தடை செய்வது தமிழர்களுக்குப் பெரும் பாதகமான சூழ்நிலையையே உருவாக்கிவிடும், இவ்வாறு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் தமிழ் சர்வதேச ஊடகம ஒன்றுக்கு தெரிவித்துள்ளனர். (உ-5)

## கப்பம்பெற முயன்றவர் கைது

(கொழும்பு)

கொழும்பு சறுவாக்காட்டுப் பகுதியில் உள்ள கோடீஸ்வரர் ஒருவருக்கு தொலைபேசி மூலமாக மரண அச்சுறுத்தல் விடுத்து 10 இலட்சம் ரூபா கப்பம்பெற முயன்ற இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (செ-9)

## மாணவன் காயம்

(யாழ்ப்பாணம்)

சைக்கிள் கார் விபத்தில் சிக்கிய பாடசாலை மாணவன் காலில் காயமடைந்த நிலையில் யா/ போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சி. நிரோசன் (வயது 13) என்ற மாணவனே பாடசாலைக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை கார் மோதியதில் காயமடைந்தவராவார். (உ-6)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மீள் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வேலணை தெற்கு ஐயனார் சனசமூக நிலையத்தின் திறப்பு விழாவும் சிவன் இராத்திரி விழாவும் நாளை நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் மு. சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக ஈ.பி.டி.பி.யின் தீவக அமைப்பாளர் ந. மதனராஜா வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலர் செ. இரத்தினம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அளவெட்டி அருணாசலம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க. அருணாசலம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவிற்கு வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திருலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (உ)

# சுகாதார சேவைகளை வழங்குவதில் திணைக்களம் அசமந்தப் போக்கு

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதிகளில் சுகாதார சேவைகளை வழங்குவதில் சுகாதாரத் திணைக்களம் அசமந்தப் போக்கினைக் கடைப்பிடித்து வருவதாக பொதுமக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர் ஆகிய இடங்களில் சுகாதார ஊழியர்கள் நூற்று முப்பத்தி ஆறு பேர்களே சேவை ஆற்றி வருகிறார்கள்.

இவ் இடங்கள் அனைத்திற்கும் மேற்கூறப்பட்ட எண்ணிக்கையிலான சுகாதார ஊழியர்கள் போதாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தீவுப் பகுதியில் வெளிக்கள குடும்ப நல சேவை உத்தியோகத்தர்கள் எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

அத்துடன் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் வெளிக்கள குடும்பநல சேவை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் முப்பத்தி ஆறு உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுத்தால் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் என மக்கள் தரப்பில் கருதப்படுகிறது. (செ-75)

## சமயப் போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிக்கு தங்கப்பதக்கம்

(சங்கானை)

எதிர் வரும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு சித்தன் கேணி சுப்றா கல்வி நிலையத்தினர் நடத்திய சிறந்த சமயப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன

இப் போட்டியில் 1ம், 2ம் 3ம் இடங்களை முறையே தர்மினி கவீந்திரன் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, விஜயகுமார் டினேஷ் யாழ் இந்துக் கல்லூரி, தரிஜா தனபாலசிங்கம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி ஆகியோர் தங்க, வெள்ளி, வெண்கல பதக்கங்களை பெற தகுதி பெற்றுள்ளனர்

சிவராத்திரி தினத்தன்று சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் இவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும். (உ-124)

## பண்ணாகம் பகுதியில் விஷமிகள் தீச் செயல்

(சங்கானை)

பண்ணாகம் பகுதியில் விஷமிகள் சிலர் கடந்த சனியன்று வீடு ஒன்றைத் தீயிட்டுக் கொழுத்தியுள்ளனர்.

இதேவேளை, மேற்படி பகுதி கிராம சேவையாளர் ஒருவரது வீட்டு வேலியும் விசமிகளின் இத் தீச் செயலுக்கு இலக்காயிருப்பதாக கூறப்படுகிறது.

ஊரை இரண்டுபடுத்தும் நோக்கம் கொண்ட சிலரே இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. (உ-412)

# சுன்னாகத்தில் பழம் பதனிடும் தொழிலகம்

(தென்மராட்சி)

பட்டினிக்கு எதிரான இயக்கம் சுன்னாகத்தில் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் பழம் பதனிடும் தொழிற்சாலை ஒன்றினை சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நிறுவவுள்ளது.

இத் தொழிற்சாலையை நிறுவுவது தொடர்பான ஆரம்ப வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மிகவிரைவில் இதனை முழுமையாகச் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் அமுலாக்கப்படும் எனவும் அறியப்படுகின்றது. [உ-77]

# விசர் நாய்க்கடிக்கு 150 பேர் பலியாம்

[கொழும்பு]

இலங்கையில் வருடாந்தம் 150 பேர் விசர்நாய் கடியால் மரணமடைவதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

கடந்தவருடம் மட்டும் 112 பேர் மரணமடைந்ததாகவும், விசர்நாய்கடிக்கு ஏற்றப்படும் ஊசிமருந்திற்கு 20 இலட்சம் ரூபா செலவிடப்படுவதாகவும், விசர்நாய் கடிக்கு சிகிச்சை செய்வதற்காக 10 கோடி ரூபா செலவிடப்படுவதாகவும சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. [க-03]

# நாட்டின் நிலை குறித்து மக்களுக்கு விளக்கம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார நிலமைகள் குறித்து பொது மக்களுக்கு விளக்கிக் கூறும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் இது சம்பந்தமான திட்டமொன்றினை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நாட்டின் தற்போதைய பொருளாதார உண்மைநிலைவரம் என்ன? நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பின்னடைவுகளுக்குக் காரணம் என்ன? இத்தகைய சந்தர்ப்பங்களில் பொது மக்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பவை பற்றி இத்தகைய திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு விளக்கிக் கூறப்படுமென்றும்,

இதேவேளை அற்ப அரசியல் இலாபங்களுக்காக சில கட்சிகள் பொருளாதாரம் தொடர்பான விடயங்களை விரிவுபடுத்திக் கூறுவதைத் தடுக்க இப் பிரச்சாரத் திட்டம் வழி கோலும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

## உயிர் கொல்லி

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

- வாகனங்களின் பாவனையற்ற ரயர்களில் நீர் தேங்காதவாறு மணல் நிரப்பி அல்லது துளைகளை இட்டு வைத்தல்,
- அலங்காரப் பூச்சாடிகளில் உள்ள நீர் மற்றும் சாப்பாட்டு மேசைக் கால்களின் கீழ் எறும்பு ஏறாதவாறு வைக்கும் நீருக்கு உப்புக்கரைசல், சவர்க்காரம் இடல்,
- நீரைச் சேகரித்து வைக்கும் நீர்த்தாங்கிகள், ஏனைய பாத்திரங்களை அடிக்கடி நீரை மாற்றிப் பாவிப்பதுடன் நன்றாக சுத்தம் செய்தும் மேற்பக்கத்தை மூடியால் மூடியும் பாவித்தல்,
- எமது பாடசாலை, அலுவலகம், வீடு, விளையாட்டிடங்கள், வாசிகசாலைகள், கடைகள் போன்றவற்றை அண்டிய சூழலில் நீர் தேங்காது பார்த்துக் கொள்ளல்,
- மேலதிக உதவி தேவைப்படின், அவ்வப்பகுதி சுகாதார கட்டுப்பாட்டு நிலையங்களுடன் தொடர்பை ஏற்படுத்துதல்,
- சுகாதாரப் பகுதியினரின் துணையுடன் உரிய வழிகாட்டலுக்கமைய பிரதேசங்கள் தோறும் 'டெங்கு' விழிப்புணர்ச்சிக் கருத்தரங்குகளை நடத்தல்,
- சுகாதார அறிவு பற்றிய போதிய கவனமில்லாதவர்களுக்குநோயின் தாக்கத்தை எடுத்துக் கூறி தடுக்கும் வழிமுறைகளையும் சொல்லிக் கொடுத்தல்,

மேற்குறித்த வழிவகைகளைக் கருத்துடனும் கண்ணியத்துடனும் சமூக நலன்களைக் கருத்திற் கொண்டு மேற்கொண்டவரின் 'டெங்கு' எனும் உயிர்க் கொல்லி நோயை அடியோடு எமது பிரதேசத்திலிருந்து விரட்டலாம். மன உறுதியுடன் டெங்கை ஒழித்து ஒளிமயமான வாழ்வை அமைப்போம்.

## ஊடகவியலாளர் ஒன்றிணைந்து புதிய அமைப்பு உருவாக்கம்

[கொழும்பு]

நாடளாவிய ரீதியில் சிதறிக்கிடக்கும் ஊடகவியலாளர்களை ஒன்று சேர்த்து இலங்கை பிராந்திய ஊடகவியலாளர் காங்கிரஸ் என்ற பெயரில் ஒரு அமைப்பை இலங்கைப் பத்திரிகை கவுன்ஸில் அண்மையில் உருவாக்கி உள்ளது.

இந்தத் தேசிய அமைப்பில் தமிழ் பேசும் ஊடகவியலாளர் அமைப்புகளும் இடம் பெற வேண்டும். என அமைப்பின் தலைவர் வேஹல்ல அழைப்பு விடுத்துள்ளார்.

பிராந்திய ரீதியில் இயங்கும் தமிழ் பேசும் ஊடகவியலாளர் அமைப்புகள் தமது அமைப்புபற்றிய விபரங்களை வேஹல்ல பியதிலக ஹிரிபிட்டிய பன்னிப்பிட்டிய என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. [உ-9]


## வாழ்த்திவணங்குகிறோம்

யாழ். நாயன்மார் கட்டு இராஜ இராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய தேர், தீர்த்த மகோற்சவங்களின் போது தண்ணீர்ப்பந்தல் சபையினராகி நாங்கள் அடியார்கள் தாக சாந்தி செய்ய உதவுவது வழக்கம் இச் செயற்பாட்டு நிர்வாகத்தை வயதில்மிக இளையவர்கள் தான் செய்ய வேண்டும். அப்போது தான் இளம் சிறார்களிடம் தலைமைத்துவப் பண்புகள் வளரும் என்ற தனது இலட்சியத்தைச் செயற்படுத்தி வழி நடத்தி வெற்றி கண்ட எங்கள் ஆசான் மதிப்புக்குரிய.

**திருநாவுக்கரசு கமலநாதன்**

(பீடாதிபதியாழ். தேசியகல்வியியற்கல்லூரி) அவர்கள் யாழ் பல்கலைக் கழகத்தில் கல்வியியல் 'கலாநிதி' பட்டம் பெற்றதையிட்டுப் பேருவகை அடைவதுடன் அவர் பல்லாண்டு பல்லாண்டு பணி செய்து வாழ வாழ்த்தி வணங்குகின்றோம்.

**யாழ். நாயன்மார் கட்டு**
**ஸ்ரீஇராஜஇராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள்**
**தண்ணீர்ப்பந்தல் சபையினர்**

(கி-1507)

# நாட்டில் சமாதானம் நிலவவேண்டி கிழக்கு பல்கலையில் எழுச்சிப் போர்

(கொழும்பு)

இலங்கையில் தொடரும் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் நிலவ வேண்டி கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்களின் எழுச்சிப் போராட்டம் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக இப் பல்கலைக்கழக சமூகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

எழுச்சிப் போராட்டத்தின் முதற்கட்டமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட, மறியல் போராட்டம்,கறுப்புப்பட்டிப் போராட்டம், அடையாள உண்ணாவிரதம், தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் விதத்தில் நடத்தப்பட்ட கொடித் தினம் எனபல்கலைக் கழக சமூகத்தால் முன்னெடுக்கப்பட்ட அனைத்து நிகழ்வுகளிற்கும் பொதுமக்களிடமிருந்து பெரும் ஆதரவு கிடைத்துள்ளது.

எனவே இன்று செவ்வாய்க் கிழமை நடை பெறவுள்ள மாபெரும் எழுச்சிப் போராட்டத்திற்கு சகல சமாதான விரும்பிகளும், பொது நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும், மாணவர்களும், பொது மக்களும் கலந்து கொண்டு வலுவூட்டுவதுதான் சமாதான முயற்சிகளுக்கு உந்துசக்தியாக அமையும்.

இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## செய்தித் துளிகள்

### மீள இயங்கும்

(நல்லூர்)

கோப்பாய் கைதடி வீதியில் உள்ள அந்தியேட்டி மடத்தை மீள இயங்கவைப்பதற்கான நடவடிக்கையை, கோப்பாய் அந்திய காலச் சேவைச் சங்கத்தினர் மேற் கொண்டுள்ளனர். (உ-103)

### கதிரைகள் வழங்கல்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப பணிமனையின் பொது நூலகக் கேட்போர் கூடத்தின் பயன்பாடு கருதி, 70 ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகள், சபையினால் வழங்கப்பட்டுள்ளன. உ-103)

### பஸ் தரிப்பு

(நல்லூர்)

திருநெல்வேலிச் சந்தியில், யாழ், பகுதி நோக்கிச் செல்லும் இ.போ.ச. பஸ் பிரயாணிகளின் நலன் கருதியும், பலாலி நோக்கிச் செல்லும் பிரயாணிகளின் நலன்கருதியும் இரு பக்கங்களிலும், பஸ் தரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு, நல்லூர் பிரதேச சபை ஒழுங்குகளை மேற் கொண்டுளளது. (உ-103)

### அனுமதி மறுப்பு

(நல்லூர்)

கோண்டாவில் இ.போ.ச. டிப்போவுக்குப் பின்புறமாக கல்லுடைக்கும் தொழிற்சாலையை அமைப்பதற்கு, நல்லூர் பிரதேச சபை, அனுமதி மறுத்துள்ளது

சூழல் மாசுபடுதல், விவசாயிகள் பாதிப்பு, என்பவற்றைக் கருத்திற் கொண்டு, அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-103

### பாலர் பகல் விடுதிக்கு புதியகட்டடம்

(நல்லூர்)

கோப்பாய் பாலர் பகல்விடுதிக்குப்புதிய கட்டடம்ஒன்றை அமைப்பதற்கான ஒழுங்குகள் மேற் கொளளப்பட்டுள்ளன.

திருமலை சமூக நலத் துறைத் திணைக்களம்இதற்கு 5 லெட்சம் ரூபாநிதியைவழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-103)

### சுத்திகரிப்பு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையின் சுத்திகரிப்புப் பணி திருநெல்வேலி, கல்வியங்காடு, கொக்குவில், ஆனைக்கோட்டை, கோண்டாவில், இணுவில் ஆகிய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. (உ-103)

### சட்ட நடவடிக்கை

[கொழும்பு]

முறைகேடான விதத்தில் சமுர்த்தி உதவிகளைப் பெறுவோர்மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சட்ட விரோதமான முறையில் பயன்களைப் பெறும் நபர்களை இனங்காணும் விடயத்தில் ஒத்துழைப்பு நல்குமாறும் வறுமை நிவாரணத் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் அமைப்புக்கள் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன. [உ-7]

### குற்றப் பிரேரணை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக் கெதிராக பாராளுமன்றத்தில் குற்றப் பிரேரணை கொண்டு வரப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. (உ-05)

### இன்று கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கொக்குவில் மேற்கு ஜே-124, ஜே-125, ஜே-127 ,ஜே-128 கிராம சேவகர்பிரிவுக்குட்பட்ட கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுக்களுக்கான கருத்தரங்கு இன்று பிற்பகல் 4.30மணிக்கு யா/கொக்குவில் ஞானபண்டிதா வித்தியாசாலையில் நடைபெறவுள்ளதாகமேற்படி பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர்கள் அறிவித்துள்ளனர். [க-15]

### ஆண்டுவிழாவும் சிவராத்திரி விழாவும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 47 வது ஆண்டு விழாவும், சிவராத்திரி விழாவும் ஆலய மண்டபத்தில் நாளை புதன்கிழமை பி.ப 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தலைவர் இ. விஜயரத்தினம் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் சைவப் புலவர் வ. கந்தசாமி வரவேற்புரையும், பிரதமகுரு பிரம்மஸ்ரீ பா. முரளீதரக் குருக்கள் ஆசியுரையும் நிகழ்த்துவர் (உ)

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

(ஊர்காவற்றுறை)

யா/கரம்பொன் சிறியபுஸ்ப மகளிர் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது

அதிபர் அருட்சகோதரி தயாநாயகி செபமாலைமுத்து தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். உ-75)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யா/கொட்டடி நமசிவாய வித்தியாலய வருடாந்த இல்ல தடகளப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிக்கு கொட்டடி கலைவாணி விளையாட்டு மைதானத்தில் அதிபர் செ. பத்மநாதன் தலைமையில் இடம்பெறுகிறது

இந்நிகழ்வில் யா/பிரதேச செயலர் பா. செந்தில்நந்தன் பிரதம விருந்தினராகவும், யாழ் கல்விவலய உதவிக் கல்விப்பணிப்பாளர் த அருணகிரிராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (உ)

★ ★ ★

(ஆவரங்கால்)

யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி சூ. ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் வி. பாலசிங்கம் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொள்கிறார். (உ-57)

### வருடாந்த பொதுக்கூட்டம்

(மூளாய்)

அராலி தெற்கு செம்பிதோட்ட ஞானவைரவராலய பஜனை மன்றத்தின் 38 ஆவது வருடாந்தக் கூட்டம் நாளை புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [செ-113]

## பத்திரிகையாளர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் எதிர்வரும் 24 ஆம் திகதி பத்திரிகையாளர் சந்திப்பொன்று நடத்தப்படவுள்ளது.

நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அதன் யாழ் அலுவலகத்தில் பி.ப 2.00 மணியளவில் இச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-12]

## இராசி பலன்

20-02-2001
(மாசி 8, செவ்வாய்)
துவாதசி மு.ப 8 01 வரை
உத்திராடம் ந.இ 12.35 வரை
இராகுகாலம் 3.32- 5.22
சுபநேரம் 11.02 12.32
சித்தம், பிரதோச விரதம்.

**மேடம்**
தொழிலால் நன்மை, காரிய விருத்தி, அதிகாரம், பிறர் உதவி.

**இடபம்**
அச்சமான நிலை, கட்டுப்படுதல், தொழில் முயற்சி ஜெயம், பிரயாணம்.

**மிதுனம்**
பிரயாண பயம், எதிர்பாராத பிரச்சினை, நிலை மாற்றம், முயற்சி தாமதம்.

**கடகம்**
போசன சுகம், தனவரவு, அலுவலக மனஸ்தாபம், காரியம் கைகூடும்.

**சிங்கம்**
நோய் குணமடைதல், புதிய முயற்சி, மனமகிழ்ச்சி, தொழில் கஷ்டம்.

**கன்னி**
காரிய அனுகூலம், வியாதி, தாழ்வு நிலை, குடும்பக் கவலை.

**துலாம்**
தன்னம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம், ரோகம், காரிய தாமதம்.

**விருச்சிகம்**
பிரயாணம், அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, முயற்சி வெற்றி.

**தனுசு**
வாக்குக் கலகம், காரிய தாமதம், தனவிரயம், மதிப்புக் குறைவு.

**மகரம்**
ஜனவசியம், கற்பனை மிகுதி, சயன சுகம், முயற்சி மந்தம்.

**கும்பம்**
பிரயாணம், கோபப்படுதல், சயன சுகக் குறைவு, சுக செலவு.

**மீனம்**
கீர்த்தி, காரியம் கைகூடும், பொருள் வரவு, நண்பர்கள் சந்திப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

## ஆலயங்களுக்கான யாப்பு விதிகளை அங்கீகரிக்கும் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச வழிபாட்டு அபிவிருத்தி ஒன்றியத்தினால் தயாரிக்கப்பட்ட ஆலயங்களுக்கான யாப்பு விதிகளை அங்கீகரிப்பதற்கான பொதுக் கூட்டம் வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெறவுள்ளது.

ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில்சம்பந்தப்பட்ட பகுதி பிரதேச வழிபாட்டு அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் வணபிதா யூட் நிக்சன் அடிகளார் தலைமையில் இடம்பெறும். இப்பொதுக் கூட்டத்தில், ஊர்காவற்றுறை இந்து, கிறிஸ்தவ ஆலயங்களின் பரிபாலன சபை உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது

அத்துடன் ஆலயங்களைப் பதிவு செய்வதற்குரிய ஆவணங்களையும் தவறாது கொண்டு வருமாறு கோரப்பட்டுள்ளது.

இப்பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை ஊர்காவற்றுறைப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் செல்வி க. மேரி யூபிரேசியா மேற் கொண்டுள்ளார். (உ-75)

## சிவராத்திரி தினத்தன்று நாட்டின் சமாதானம் வேண்டி பிரார்த்திக்க

### இந்துசமய பேரவை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

எந்த ஒரு நபரும் சிவராத்திரி தினத்தன்று களியாட்டங்களிலும் சினிமாப்படம் பார்த்தல் போன்றவற்றிலும் பங்கு கொண்டு அந் நாளின் புனிதத் தன்மைக்கு களங்கம் ஏற்படுத்தக் கூடாது என இந்து சமயப் பேரவை சிவராத்திரி தினத்தை முன்னிட்டு விடுத்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந் நாளில் திருமுறைகளை ஓதியும், தியான ஜெயபூஜா காரியங்களில் ஈடுபடுமாறும், உலகில் வாழும் கோடிக் கணக்கான இந்துக்களின் புனித நாளான சிவராத்திரி தினத்தில் எல்லாம் வல்லபரம் பொருளான ஸ்ரீபார்வதி பரமேஸ்வரனை வேண்டி இலங்கைத் திரு நாட்டில் சமாதானம்ஏற்படக் கருணை செய்யுமாறு மிகுந்த பக்தி பூர்வமாக அனைவரையும் பிரார்த்தனையில் ஈடுபடுமாறும் மிகுந்த ஆராமையோடு கேட்டுக் கொள்கிறோம் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## வேலியேபயிரைமேய்கிறது நீர்வேலியில் சம்பவம்

### பொது மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

வேலியே பயிரை மேய்ந்த கதையாக சட்ட விரோத மின்சாரம் பெறும்விடயத்தில் சன சமூக நிலையங்களில் முக்கிய பதவி வகிப்பவர்களே கூடுதல் கரிசனை காட்டுவதாக நீர்வேலிப்பகுதி பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நீர்வேலியின் ஐயாவத்தை, கப்மந்தோண்டி போன்ற பகுதிகளிலேயே இச் சட்ட விரோத மின்சாரம் கூடுதலாக பெற்றுக்கொள்வதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதான வயர்களிலிருந்து நீண்ட தூரத்திற்கு மின்சாரம பெறும் இத்தகைய செயற்பாடு உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட சமூக வழிகாட்டிகள் என்று கூறுவோர் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுறது. (க)

## கரம்பொன் பகுதியில் திருடர் அட்டகாசம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கரம்பொன் பகுதியில் திருடர்களின் அட்டகாசம் வெகுவாக அதிகரித்துள்ளது.

இப் பகுதி வீடுகளில் உள்ள காளை மாடுகளை இரவில் திருடிச்சென்றுவிடுகிறார்கள்.

அத்துடன் ஆட்கள் இல்லாத வீடுகளின் ஓடுகள் மரங்கள், யன்னல்கள், கதவுகள், எல்லாவற்றையும் கபளீகரம் செய்து விடுகிறார்கள்.

இத்தகைய திருட்டுக்கள் ஊரடங்கு வேளையிலேயே இடம் பெறுகின்றமையால், சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் திருடர்களின் கொட்டமடக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. [செ-75]

## சைவ சமய
# பொதுஅறிவு, செயல்முறை போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தினால் நடத்தப்பட்ட பொது அறிவுப்போட்டி மற்றும் செயல்முறைப் போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

சைவ சமய அறிவுப் பரீட்சையில் முதலாம் இரண்டாம், மூன்றாம் பரிசில்களைப் பெற்றோர் விபரம் பாடசாலைகளில் கல்வி கற்கும் தரங்களின் அடிப்படையில் ஒழுங்காகத் தரப்படுகிறது.

**தரம்-1**

செல்வி உ. ரிசிகேசனி யா-யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
செல்வன் சி. சாரங்கன் யா-யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.
செல்வி ச. நிகிந்தா யா-யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

**தரம்-2**

செல்வி சி. துசானி யா-யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
செல்வி ச. துவனிகரா யா-கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
செல்வி அ. ரதீபனா யா-தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி

**தரம்-3**

செல்வன் ம. துவாகரன் யா-யாழ். இந்து ஆரம்பபாடசாலை.
செல்வன் வி. தீபன்ராஜ் யா-ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்.
செல்வன் சி. சகீதரன் யா-யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

**தரம்-4**

செல்வன் ந. பிரணவன் யா-நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்.
செல்வி ச.சக்தித ஜினி யா-கந்தரோடை த.க வித்தியலாயம்
செல்வன் க கோகுலன்யா-தெல்லிப்பழைமகாஜனாக்கல்லூரி.

**தரம்-5**

செல்வன் சு. கௌரிநாத் யா-யாழ் இந்துக் கல்லூரி.
செல்வி த. துளசிகா யா-கொக்குவில் இந்துக் கல்லூரி.
செல்வி உ. நந்திகா யா-வேம்படி மகளிர் கல்லூரி.

**தரம்-6**

செல்வி சு. சஜீபா யா-நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம் **(தங்கப்பதக்கம்)**
செல்வன் கி. பிரதீபன் யா-மானிப்பாய் மெறோறியல் ஆங்கில பாடசாலை
செல்வி ம. கினித்தா யா-நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்.

**தரம்-7**

செல்வி யோ. பிரியசாளினி யா-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
செல்வி மு. சதீஜா யா-யாழ். இந்து மகளிர் கல்லூரி.
செல்வி க. கீர்த்தனா யா-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

**தரம்-8**

செல்வி ர. மீனாம்பிகை யா-யாழ். இந்து மகளிர் கல்லூரி.
செல்வி நா. இந்துஜா யா-யாழ். இந்து மகளிர் கல்லூரி.

**தரம்-9**

செல்வி அ. சிவாஜினி யா-வேம்படி மகளிர் கல்லூரி.
செல்வன் ச. தனேசன் யா-யாழ். இந்துக்கல்லூரி
செல்வி யோ. சங்கீதா யா-யாழ். இந்து மகளிர் கல்லூரி.

**தரம்-10**

செல்வி சி. துஷிக்கா யா-வேம்படி மகளிர் கல்லூரி.
செல்வி இ. சுபாகினி யா-ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
செல்வி அ. மநுவந்தியா-தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.

**தரம் 11**

செல்வி மு. சிவகலா யா-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
செல்வி சோ. குமுதினி யா-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
செல்வி செ. அமுதாஜினி யா-அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.

**தரம்-12**

செல்வி தெ. தர்சினி யா-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
செல்வி இ. சிவஜோதி யா-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
செல்வி ப. தர்சினி யா-அச்சுவேலி மகா வித்தியாலயம்.

**தரம்-13**

செல்வி வே. விஜிதா யா-மல்லாகம் மகா வித்தியாலயம்.
செல்வி த. நித்தியவாணி யா-அச்சுவேலிமகாவித்தியாலயம்.
செல்வி அ. வனித்தா யா-வேம்படி மகளிர் கல்லூரி.

கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் செயல் முறைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் கீழே,

**கோலம் போடுதல் - மத்திய பிரிவு**

செல்வி ச. துளசி யா-கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.
செல்வி கு. மிதுளா யா-கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.
செல்வி ஜெ. வனிதா யா-கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம்.

**கோலம் போடுதல் - மேற் பிரிவு**

செல்வி ச. திருநிறைச்செல்வி 381 கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
செல்வி ச. சகிலா யா-இராமநாதன் கல்லூரி
செல்வி பா. ஸ்வேதினி யா-இணுவில் இந்துக் கல்லூரி.

**மாலை கட்டுதல் - மத்திய பிரிவு**

செல்வி செ. கல்பனா யா-புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி.
செல்வி க. தயாவதி யா-புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி.
செல்வன் பா. சிவச்செல்வன் யா-யாழ் மத்திய கல்லூரி.

**மாலை கட்டுதல் - மேற் பிரிவு**

செல்வி சி. கௌசல்ஜா யா-சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
செல்வி தெ. தாரணி யா-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
செல்விக. அருள்வாணி691/A, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம்

**தோரணம் பின்னுதல் - மத்திய பிரிவு**

செல்வன் து. கோவிந்தராசா யா-நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை
செல்வன் வ. மதீசன் யா-மல்லாகம் மகா வித்தியாலயம்.
செல்வன் த. அருள்ராஜ் யா-பெரியபுலம் மகாவித்தியாலயம்,

**தோரணம் பின்னுதல் - மேற்பிரிவு**

செல்வன் இ. செல்வானந்தன் யா. இணுவில் இந்துக் கல்லூரி.
செல்வன் கு கோகுலபாலன்யா-மல்லாகம் மகாவித்தியாலயம்
செல்வன் கு. நிமலராஜ் யா-நயினாதீவு மகா வித்தியாலயம்.

(உ)

## அரசுக்கும் புலிகளுக்கும்
# சமாதானத்தில் நம்பிக்கை
# ஏற்படுத்தும் எமது முயற்சி தொடரும்
## நோர்வே பிரதிநிதி உறுதி

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதையே நாம் பெரிதும் விரும்புகின்றோம். வடக்கு-கிழக்கில் நிலவும் இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு எட்டப்பட நோர்வே அரசாங்கம் உதவும்.

நோர்வே அபிவிருத்தி ஒத்துழைப்பு தூதுக்குழுவின் தலைவரும், அரசின் இராஜாங்கச் செயலருமான சிக்ரன் மோகேதல் அம்மையார் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதில் பெரும் சிக்கல்கள் உருவாகும் எனினும் சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஏற்படுத்துவதில் நாம் ஒரு போதும் தளர்வடையக் கூடாது.

மனித உரிமையை பேணுவதிலும், பொருளாதார நடவடிக்கையில் அபிவிருத்தியாலும், யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதிலும் இலங்கை வளர்ச்சி பெற்றிருப்பது போற்றத்தக்கவொரு நடவடிக்கையாகுமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-இ)

## சிவராத்திரி நிகழ்வு

(சங்கானை)

சிவராத்திரி தினத்தன்று சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் விசேட கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

'சுப்றா' நிறுவனத்தினரின் ஆதரவில் ''சிவபூசையில் சிறந்து விளங்குபவர் கண்ணப்பரா? சிறுத்தொண்டரா?'' என்ற பட்டி மண்டபமும், சைவப்புலவர் சாந்தனின் ''சிவராத்திரி மகிமை'' என்ற சிறப்பு சொற்பொழிவும் இடம் பெறும். [உ-124]

## வாய்க்கால் திருத்தம்

[ஈச்சமோட்டை]

குருநகர் இராஜேந்திர வீதியிலுள்ள கழிவுநீர் செல்லும் வடிகால் திருத்தம் செய்யப் பட்டுவருகின்றது

குருநகர்ப்பகுதியில் அதிகளவான கழிவுநீர் வடிகால்கள் இருப்பதும் அவை நீண்டகாலமாகவே சேதமடைந்து மக்கள் பல சுகாதார பிரச்சினைகளை எதிர் நோக்கி வருவது குறிப்பிடத்தக்கது (உ-11)

# இலங்கையர் ஒருவர் சென்னையில் கொலை

(கொழும்பு)

சென்னைஎழும் பூரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த இலங்கையர் ஒருவர் இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வேலணையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை துரைசிங்கம் என்பவரையே கொலை செய்துள்ளனர்.

இவர் இலண்டனில வசித்து வந்தவர், கடந்த மாதம் 13ம் திகதி மேற்படி ஹோட்டலில் அறைஒன்றில்தங்கியிருந்தார்.

இவருடைய பணத்தினைப் பறிப்பதற்காக இவரைக் கொலை செய்திருக்கலாம் என பொலிஸாரால் கருதப்படுகிறது. (செ)

# அரசு தாதியர் கல்லூரிகளை பல்கலைக் கழகங்களுடன் இணைக்க அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டிலுள்ள பதினொரு அரச தாதியர் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களுடன் இணைத்து டிப்ளோமா சான்றிதழ் பெறக் கூடிய வகையில் ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கத்தின் தாதியர் மத்திய நிலையம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

தாதியர்களிற்கு கற்பிக்கப் பட்டு வரும் பாடத்திட்டத்தில் சிங்களம் மற்றும் பாளி மொழிகளும் கலந்துள்ளன.

இதனால் சர்வதேச தரத்துடன் நாம் இணைந்து செயற்படமுடியாதுள்ளது. எனவே தாதியர்களுக்கான பாடநெறியை ஆங்கிலத்தில் மாற்றித் தருப்படியும் அவர்கள் அரசைக் கோரியுள்ளனர்.

இதேவேளை, 1958 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட பாடத்திட்டமே தாதியர் பாடநெறியில் நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-09]

# சிஹல உறுமய எம்.பி பதவி துறப்பு

(கொழும்பு)

சிஹல உறுமய கட்சி எம். பி. திலக் கருணாரத்ன விரைவில் தமது எம். பி. பதவியைத் துறக்கவுள்ளார்.

இக்கட்சியின் ஒரே ஒரு எம் பி யானஇவர்பதவியைத் துறந்ததும் இக்கட்சியின் புதிய எம். பியாக கட்சியின் தேசிய அமைப்பாளர் தம் மிக்கரணவிக்கே நியமிக்கப் படவுள்ளார்.

இதற்கானதீர்மானத்தினை கட்சியின் அரசியல் குழு எடுத்துள்ளது.

திலக்கருணாரத்ன எம்.பி பதவியைத் துறந்த பின் கட்சியின் தலைவராக நியமிக்கப் படுவார் என்ற ஊகங்களும் நிலவுகின்றன. (செ)

## 75 ஆவது ஆண்டுவிழா

[கொழும்பு]

இலங்கை வானொலி ஆரம்பிக்கப்பட்டு 75 வது ஆண்டு நிறைவு விழா இன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டுமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (செ)

## பருத்தித்துறை பிரதேச செயலகம்
# அமைப்பதற்கான காணியைவழங்க வல்வெட்டித்துறை நகரசபை முடிவு

(மந்திகை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கான நிரந்தர கட்டடம் அமைப்பதற்கென காணியை வழங்க வல்வெட்டித்துறை நகர சபை விருப்பம் தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகம் நீண்டகாலமாக நிரந்தரக் கட்டடம் இன்றிப் பல்வேறு சிரமங்களின் மத்தியில் இயங்கி வருவதையடுத்து கட்டடம் கட்ட தேவையான நிதியை அரசு ஒதுக்கிய போதும் பொருத்தமான இடத்தில் காணியை வாங்கத் தேவைப்படும் பணத்தினை பொதுமக்களிடமிருந்தே திரட்டும் பணி இடம் பெற்று வந்தது.

பொது மக்கள் நிதி வழங்குவதில் காணப்படும்பொருளாதாரச் சிக்கல்களை கருத்திற் கொண்டே வல்வெட்டித் துறை நகர சபை மேற்படி முடிவினை எடுத்திருப்பதாக நகரபிதா எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில், பொலிகண்டிப் பகுதியில் அமைந்துள்ள வல்வெட்டித்துறைநகரசபைக்குச் சொந்தமான 10 பரப்பு காணியை வழங்குவதற்கான தீர்மானத்தினை வல்வை நகர சபை நிறைவேற்றியுள்ளது. (உ-23)

# திட்டமிட்டபடி சத்தியாக்கிரகம் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்க்கு 400 ரூபா சம்பள உயர்வு கோரி சத்தியாக்கிரகப் போராட்டம் திட்டமிட்டபடி நேற்று முதல் மலையகத்தில் ஆரம்பமாகியுள்ளது.

மிகவும் எளிமையானமுறையில் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் மலையக பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாண அமைச்சர்கள் மற்றும் தொழிற்சங்கவாதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மேற்படி சத்தியாக்கிரக போராட்டம் தொடர்பாக நேற்று ஜனாதிபதி சந்திரிகா, அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மற்றும் தொழிலமைச்சர் அலவி மௌலான உட்பட பல பிரமுகர்களுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது: (உ-9)

## இன்று ஒரு தகவல்

# நம்பிக்கையில்தான் வாழ்வு

வாழ்க்கை நம்பிக்கையில் தான் தங்கியுள்ளது. மதங்கள் நம்பிக்கையை ஊட்டுகின்றன நாம் கற்ற கல்வி நம்பிக்கையூட்டுகின்றது. பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகள் அவர்கள் உதிர்த்துவிட்டுச் சென்ற வாக்கியங்கள் எமக்கு நம்பிக்கை யூட்டுகின்றது:

மனிதன் தன் வாழ் நாளின் பெரும் பகுதியை துன்பத்தில் தான் கழிக்கின்றான் நோய், பற்றாக்குறை, இடப்பெயர்வு, தொழிலின்மை, மகப்பேறின்மை, வறுமை இப்படி எத்தனையோ பிரச்சினைகள் தினமும் தோன்றி மனிதனை வதைத்தெடுக்கின்றன. சோதிடம் மனிதனின் நம்பிக்கையின் முழுவடிவம் சோதிடம் பார்க்காத மனிதர்கள் மிக மிகக் குறைவு. கடவுளை நம்பாத நாஸ்திகனின் மனைவி கூடச் சோதிடம் பார்ப்பாள். அதை அவளது நாத்திகக் கணவனால் கூடத் தடுக்க முடியாது.

துன்பங்கள் வரும் போது சோதிடர்கள் கூறும் பரிகாரங்களை கோயிலில் நிறைவேற்றுவதால் அத்துன்பங்கள் யாவும் நீங்கி விடும் என்ற நம்பிக்கை மக்களில் பெரும்பான்மையோருக்கு உண்டு

புராணங்கள் இதிகாசங்கள் தேவார திருவாசகங்களெல்லாம் சோதிடக் கலை பற்றியும், கிரகங்களின் தாக்கங்களால் இதிகாசபுருசர்கள் அடைந்த துன்ப துயரங்களைப் பற்றியும் கூறுகின்றன. அவதார புருசனானஇராமன் கூட கிரக சாரத்திற்குட்பட்டு துன்பப்பட்டதாக இராமாயணம் கூறுகிறது. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் மக்களால் இன்பமாக வாழ முடிகிறது.

ஒரு புதிய தொழிலைத் தொடங்கும் போது நல்ல நேரம் பார்த்துத் தொடங்கச் செல்வது, நல்ல நேரத்தில் தொழிலைத் தொடங்கினால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுவதற்காகவே பாமர மக்கள் மட்டுமன்றி படித்தவர்கள் கூட சகுனங்களில் நம்பிக்கை வைத்துள்ளனர்.

பூனை குறுக்கே செல்லக் கூடாது அமங்கலிஎதிரேவரக் கூடாது, சமுதை கத்தினால் நல்லது இவை சகுனங்கள் என முன்னோர் வகுத்துள்ளனர் நம்பிக்கையோடு வெளியே புறப்படும் ஒருவன் எதிரே சகுனப் பிழையானவர் வந்தால் திரும்பி வீட்டிற்கு வந்து சில நிமிடங்கள் கழித்துச் சென்றால் காரியம் கை கூடும் என்று நம்புகிறான். அதனால் அவன் நம்பிக்கையோடு திரும்பி வந்து காலதாமதமாகச் செல்கிறான். அதனால் காரியம் கை கூடினால் சகுனத்தை நம்புகிறான். இல்லாவிட்டால் விதியை நொந்து கொள்கிறான். இதனால் அவனுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது.

எமக்கு முன்பு வாழ்ந்த சமய ஞானிகள் துன்பங்களிலிருந்து விடுதலை பெற கடவுளை நம்புங்கள் என்றும் கடவுளர்க்கு நேர்த்திக்கடன் வைத்து ஆராதனை செய்யுங்கள் என்றும் கூறியுள்ளனர்.

நாம் எந்த ஒரு செயலைச் செய்வதானாலும் கடவுளை வணங்கிய பின்பே செய்கிறோம். எனவே அச் செயலுக்கான பொறுப்பை கடவுளிடம் ஒப்படைத்து விடுகிறோம். அதனால் மனப்பாரம் குறைந்து நிம்மதி ஏற்படுவதுடன் செயலுக்கான பொறுப்பும் இல்லாமல் போய் விடுகிறது. எமது குல தெய்வம் எம்மைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கை எமக்கு தோன்றுகிறது.

இந்த நம்பிக்கையால் தான் எமது மக்கள் ஷெல் அடிக்கின்ற இந்தப் பூமியில் அச்சமின்றி வாழ்கிறார்கள்

ஆகாய விமானத்தில் பயணிக்கும் ஒருவன் அந்த விமானம் விழுந்து விடும் என்று நினைத்தால் பயணஞ் செய்யத் துணிவானா? தினமும் விமானங்கள் விழுந்து கொண்டிருக்கின்றன. இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் விமானங்களில் பயணஞ் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பயணஞ் செய்வதற்குக் காரணம் தாம் பயணிக்கும் விமானம் கடைசி வரையும் விழாது என்ற நம்பிக்கை தான். இந்த நம்பிக்கையை சமயங்களே மக்களுக்குக் கொடுக்கின்றன. இந்து மதம் சோதிடத்தை முழுமையாக நம்புகிறது. மற்றைய மதங்களும் நம்புகின்றன.

பகுத்தறிவாளர்கள் இவற்றையெல்லாம் மூடநம்பிக்கைகள் என்று சொல்கிறார்கள். எனினும் அவர்களும் எதுவோ ஒன்றில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அது தான் நம்பிக்கையாக இருக்கலாம். சமயங்கள் சோதிடம் சகுனங்கள் என்பவையும் தன்னம்பிக்கையை ஊட்டுகின்றன;

இன்று நமது நாட்டில் நடை பெறும் பேச்சு வார்த்தைகள் கூட நம்பிக்கையைக் கொடுக்கின்றன. நிச்சயம் யாவும் வெற்றியளிக்கும் என்று நம்புபவனே வாழ்க்கையில் வெற்றியடைகிறான். தோல்வியடைபவர்கள் நம்பிக்கை இல்லாதவர்களே.

**நே. வி. குணசேகரம்**

# 24 இலங்கையர் புதுடில்லியில் தவிப்பு

[கொழும்பு]

ஜேர்மனி செல்லமுற்பட்டதாக கருதப்படும் இலங்கையை சேர்ந்த 24 பேர் தற்போது புதுடில்லியில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில்இலங்கைக்குதிருப்பி அனுப்பப்படுவர் என்றும் நம்பகரமான தகவல்கள் தெரிவித்துள்ளன.

அத்தகவல்களில்,

ஜேர்மன் செல்ல முற்பட்ட பிரஸ்தாப இளைஞர்கள் கஸகஸ்தானில் வைத்து திருப்பி அனுப்பப் பட்டதாகவும் மேலும்தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு முகவர் ஒருவரால் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தகுந்த ஆவணங்கள் எதுவும் காணப்படாததல் கஸகஸ்தானில் வைத்து இவர்கள் அனைவரும் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இதே வேளையில், ஆசிய நாட்டவர் வருகைக்கு ஐரோப்பிய நாடுகள் பலவும் கடும்கட்டுப்பாடுகளை அமுல்படுத்தி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-9)

## சிவராத்திரி தின நிகழ்வு

[மூளாய்]

அராலி தெற்கு ஆகாயக் குளம் விநாயகர் ஆலயத்தில் நாளை மறு தினம் புதன் கிழமை சிவராத்திரிதினத்தை முன்னிட்டு விசேடபூஜை, அபிடேகம், சமய சொற்பொழிவு, பட்டிமன்றம், ஆகிய நிகழ்ச்சிகள் நடை பெறவுள்ளன. (செ-113)

# புலிகளைத் தடைசெய்வதன் மூலம் யுத்தம் முடிவிற்கு வரமாட்டாது

## பௌத்த மதகுரு தெரிவிப்பு

[கொழும்பு]

விடுதலைப் புலிகளைத் தடை செய்வதன் மூலம் யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வர முடியாது என சமாதான விரும்பியான பௌத்த மத குரு மஹதல்கடவள ஞ்சய சாரதேரர்தெரிவித்துள்ளார்

சில நாடுகள்விடுதலைப்புலிகளைத் தடைசெய்துள்ள போதிலும் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்படவில்லை. எவ்வித பிரச்சினைகளும் இல்லாமல் மக்கள் வாழ வழி செய்ய வேண்டிய அவசர தேவையே இப்பொழுது உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது விடுதலைப்புலிகளைத் தடை செய்வதல்ல முக்கியம். போர் நிறுத்தப்பட்டு சமாதானப் பேச்சுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடை செய்தால் சமாதானப் பேச்சுக்கள் குழம்புவதுடன், பிரச்சினைகள் மேலும் அதிகரிக்கும்.

எனவே, இக்கால கட்டத்தில் பிரிட்டன் புலிகளைத் தடை செய்வது அர்த்தமற்ற ஒன்றாகும்.

அதே போல் விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் நாட்டின் எதிர்காலத்தை முன்னிட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (செ)

## சங்கீத நடன வகுப்புகள்

(இணுவில்)

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் நடத்தப்படவுள்ள சங்கீத நடன வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிககப்பட்டுள்ளது. [உ-49]

## பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக உடற்கல்வித்துறை மாணவர்களினால் கடந்த ஞாயிற்றுக் கிழமை மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு அரங்கில் நடைபெற இருந்த ஜிம்னாஸ்டிக் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது (உ-06)

## அங்குரார்ப்பணக் கூட்டம்

[மூளாய்]

அராலி தெற்கு அல்லோலம்பதி அரசடி அருள்மிகு ஸ்ரீ பார்வதி பரமேஸ்வரப் பெருமான் தேவஸ்தான திருப்பணிச்சபை அங்குரார்ப்பணக்கூட்டம் நாளை புதன் கிழமை பி.ப 4.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [செ-113]

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருக்கையில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி. துரைசிங்கம் (வயது-38) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-6)

## அலுவலகம் திறப்பு

(இணுவில்)

புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிய அதிபர் அலுவலகம், திறந்த வெளி அரங்கம் என்பன அண்மையில் உடுவில்கல்விக் கோட்டஉதவி கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தனால் திறந்து வைக்கப்பட்டது. (உ-49)

## முரளிதரன் முன்னணியில்

(கொழும்பு)

சியெட் தரப்படுத்தல் வரிசையில் இலங்கை அணியைச் சேர்ந்த முத்தையா முரளிதரன் முதலாமிடத்தை பெற்றுள்ளார்.

2000 - 2001ஆண்டுக்கான சியெட் தரப்படுத்தலில் முரளிதரன் 94 மொத்தப் புள்ளிகளுடன் முன்னிலையில் இருக்கிறார். [உ]

ஊர்காவற்றுறைக் கோட்டத்தில்

## கரப்பந்து, வலைப்பந்து போட்டிகள் வியாழனன்று

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் குழு விளையாட்டுப் போட்டிகளில்,

எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் இடம் பெறவுள்ளன.

இப் போட்டிகளில் ஊர்காவற்றுறை காரைநகர், அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த பத்திற்கும் மேற்பட்ட அணிகள் பங்குபற்றவுள்ளன. (செ-75)

## நீண்ட காலங்களாகத் திருத்தப்படாத வீதி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் மெலிஞ்சி முனைக்குச் செல்லும் வீதி நீண்டகாலமாக திருத்தஞ் செய்யப்படாது குன்றுங் குழியுமாகக் காட்சியாளிக்கின்றது.

இது பற்றிச்சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென, மெலிஞ்சி முனைக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ் வீதி ஊர்காவற்றுறைப் பிரதேசசபைக்குச் சொந்தமான வீதி என்பது குறிப்பிடத்தக்கது. (செ-75)

## கோண்டாவில் மகப்பேற்று வைத்தியசாலையில் அடிக்கடி மின் வெட்டு

[ஆவரங்கால்]

கோண்டாவிலில் இயங்கும் மத்திய அரசினர் மருந்தகம் மற்றும் மகப்பேற்று வைத்தியசாலைக்கு இரவுநேர மின் வெட்டு அடிக்கடி அமுல்ப்படுத்தப்படுகிறது.

முன்னறிவித்தல் எதுவுமின்றி இடம்பெறும் இவ்வாறான மின்வெட்டினால் மகப்பேற்று விடுதியில் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாக தெரியவந்துள்ளது [உ-57]

## காரை நகரில் நோய்கள் பற்றிய சுகாதார கல்வி நிகழ்ச்சி

(ஊர்காவற்றுறை)

காரை நகரில் மலேரியா, டெங்கு காய்ச்சல், எய்ட்ஸ் நோய்கள் தொடர்பான சுகாதாரக் கல்வி நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று மு.ப 9.30 மணிக்கு தியாகராஜா மத்திய மகாவித்தியாலய மாணவர்களுக்கும், பி.ப 1.00 மணிக்கு கங்கை மதி சனசமூக நிலையத்தில் பொதுமக்களுக்கும் இச் சுகாதார கல்வி நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளதாக காரைநகர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ். தயாபரன் தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்ச்சியில் வீடியோப் படக்காட்சி மூலமாகவும் சுகாதாரக் கருத்துகள் வழங்கப்படவுள்ளன. (செ-75)

## வடகிழக்கில் இருந்து இடம் பெயர்ந்தோர்க்கு கொழும்பில் கருத்தரங்கு

(கொழும்பு)

வடகிழக்கிலிருந்து இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கு, கருத்தரங்கு ஒன்று இலங்கை மன்றக் கல்லூரி கொழும்பில் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் மன்னார் வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் கலந்து கொண்டார்கள்.

இடம்பெயர்ந்தவர்களில் 8 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் முகாம்களில் தங்கியுள்ளனரெனவும் இவர்களுக்கு அரசும் அரசசார்பற்ற நிறுவனங்களும் வழங்கும் சேவைகள் போதாதுள்ளதாகவும் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டமக்களால் தெரிவிக்கப்பட்டது (உ-09)

## செய்திப்பரல்

★ கனடாவில் பனிப்புயல் வீசியதால்மலையேறிக் கொண்டிருந்த இருவர் உயிரிழந்துள்ளனர் ஏனைய 7பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

★ முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகிளின்டன், மார்க்ரிச்சுக்கு அளித்த மன்னிப்பு குறித்து, கிரிமினல் விசாரணை ஒன்றை நியூயோர்க்கிலுள்ள அட்டேர்னிமேரி ஜோவைட் ஆரப்பித்திருக்கிறார்.

★ தாய்வான் அமைச்சரவை, பிரச்சினைக்குரிய அணுச்சக்தி நிலையம் ஒன்றைக் சட்டும் முடிவை அறிவிக்கவுள்ளது.

★ சைபீரிய ஜனாதிபதி சார்ள்ஸ் டெய்லக், தென்கினி மீது படையெடுப்பு நடத்தியிருப்பதால், பழிவாங்கும் நடத்தையை மேற்கொள்ளப் போவதாய் கினி இராணுவத் தலைவர் கூறியுள்ளார்.

★ மேற்கு துருக்கியில் துருக்கிய உல்லாசப் பயணிகள் பஸ் ஒன்றின் மீது துப்பாக்கி நபர்கள் தாக்கியதில் இருபயணிகள் காயமுற்றனர்.

(உ-3)

### அவுஸ்திரேலியா செல்லும்

# குடியேற்றவாசிகள் அதிகரிப்பு

# நியூசிலாந்து மீது அவுஸ். சீற்றம்

(கன்பரா)

நியூசிலாந்திலிருந்து விசா இல்லாமல் அவுஸ்திரேலியாவிற்குள் நுழைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து அவுஸ்திரேலியா சீற்றம் அடைந்துள்ளது.

அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் தங்களது நட்புறவைப் பலப்படுத்தும் நோக்குடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டிருந்தன.

இவ்ஒப்பந்தத்தின்படி நியூசிலாந்தில் இருந்து விசா இல்லாமல் அவுஸ்திரேலியா செல்லலாம். அதேபோல் அவுஸ்திரேலியாவில் இருந்தும் விசா இல்லாமல் நியூசிலாந்து செல்லலாம்.

இவ் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதையடுத்து நியூசிலாந்தவர்கள் அவுஸ்திரேலியா செல்லும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அத்துடன் அவுஸ்திரேலியா செல்ல விரும்பும் ஏனைய நாட்டவரும் முதலில் நியூசிலாந்து சென்று குடியுரிமை பெற்று பின் அவுஸ்திரேலியாவிற்குள் நுழைகிறார்கள்.

இச்சம்பவங்களை அடுத்தே நியூசிலாந்தின் மீது அவுஸ்திரேலியா அதிருப்தி கொண்டுள்ளது. (உ-9)

## உலக தரிசனம்

## 10 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து நிலத்தில் குதித்து சாதனை

(இலண்டன்)

பிரிட்டனைச் சேர்ந்த டேவிற் மொறிஸ் என்பவர் 10 ஆயிரம் அடி உயரத்திலிருந்து நிலத்தில் குதித்து சாதனை நிலை நாட்டியுள்ளார்.

உலங்கு வானூர்தியில் பயணம் செய்த பின்னர் இவர் 10 ஆயிரம் அடி உயரத்திருந்து கீழே குதித்த அதே வேளை வான்பரப்பில் சாக்குப் பந்து ஒன்றின் மீது கால் வைத்து நின்று மற்றொரு திகைப்பை ஏற்பத்திய பின்னர் கீழே குதித்துள்ளார்.

இது உலக சாதனையாக பதிவு செய்யப்படவுள்ளது. (உ-5)

## கை இழந்த நபருக்கு புதிய கை இணைப்பு

### அமெரிக்காவில் சம்பவம்

(வாஷிங்டன்)

பட்டாசு வெடி விபத்தில் இடதுகையை இழந்த தொழிலாளிஒருவருக்கு புதிய கை பொருத்தப்பட்ட சம்பவம் அமெரிக்க வைத்தியசாலை ஒன்றில் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளது.

18 பேர் கொண்ட மருத்துவக்குழு ஒன்று மேற்படி சத்திர சிகிச்சையை மேற்கொண்டதாகவும் சுமார் 13 மணித்தியாலங்கள் இச் சிகிச்சை நீடித்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 6 மாதம் வரைக்கும் புதிய கை வழமைபோல் செயற்படும் என்றும் வைத்திய குழுவினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் இரு வருடங்களுக்கு முன்பும் இதேபோன்ற தொரு சத்திர சிகிச்சை அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்டதும் ஏற்கனவே தெரிந்ததே. (க-7)

## இந்திய - பங்களாதேஷ் எல்லையில் முட்கம்பிவேலி

(டாக்கா)

பங்களாதேஷில் இருந்து சட்டவிரோத குடியேற்றக்காரர் மற்றும் கெரில்லாக்கள் இந்தியாவிற்குள் ஊடுருவுதலைத் தடுப்பதற்காக இந்தியா-பங்களாதேஷ் எல்லையில் முட்கம்பி வேலி அமைக்கப்படஇருப்பதாகஇந்திய அரசஅதிகாரிகள் கூறியுள்ளார்கள்.

இரு நாடுகளுக்கும் இடையில்வேலி அமைக்கும் பணிகள் வரும் மார்ச்மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

1971ஆம் ஆண்டு இந்திய-பங்களாதேஷ் அரசுகட்கிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இது மேற்கொள்ளப்படவிருக்கிறதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## தமிழகத்தில் புதிய நூல்

(புதுடில்லி)

திருக்குறளின் பெருமையை முழுமையாக உணரவும்குறள் தொடர்பான ஆய்வுகளுக்கு பயன்படுத்தும் வகையிலும் திருக்குறள் கலைக் களஞ்சியம் ஒன்று தமிழகத்தில் தயாரிக்கப்படுகிறது.

தனிப்பட்ட ஒருநூலுக்கு இவ்வாறு கலைக் களஞ்சியம் தயாரிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். இவ்வளர்ச்சிக்கு தமிழகம் 3 லட்சம் நிதி ஒதுக்கியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-7)

## மலேசியாவில் சிகை அலங்கரிப்பாளர் பற்றாக்குறை

(கோலாலம்பூர்)

மலேசியாவில் சிகை அலங்கரிப்பாளர்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது

இத்தட்டுப்பாட்டினை நீக்கும்முகமாக வெளிநாடுகளிலிருந்து சிகை அலங்கரிப்பாளரைத் தருவிக்குமாறு பாவனையாளர் சங்கங்கள் மலேசிய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

கோலாலம் பூரிலும், பினாங்கிலும் சிகை அலங்கரிப்பாளர்கள் இல்லாமையினால் முப்பது சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

மலேசியர்கள் எவரும் இத்தொழிலைச் செய்ய முன்வராததனாலேயே இத்தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இங்கு 2 ஆயிரத்து ஐந்நூறு சிகை அலங்கரிப்பாளர்கள் தேவைப்படுவதாக இந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (செ)

## அரசு - ஆயுதக்குழு நேரடிப் பேச்சு

### கொலம்பியாவில் சம்பவம்

[பொகோடா

கொலம்பியாவில் புரட்சிகர ஆயுதப் போராட்டக் குழுவிற்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இலத்தின் அமெரிக்காவின் சக்தி மிக்க ''பார்க்'' என்ற புரட்சிகர ஆயுதப்போராட்ட குழுவினருக்கும், அரசாங்கத்திற்கும் கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற பேச்சுகளின் பின் முதற்தடவையாக இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போரின் தாக்கத்தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களை களைவது தொடர்பான விவகாரங்களுக்கே இவ்விரு தரப்பினரும் முக்கியத்துவம் அளித்துள்ளனர். (க-3)

## சந்தன மரக் கடத்தல் வீரப்பனின் மற்றொரு சகாவும் கைதானார்

(சென்னை)

சர்ச்சைக்குரியவனாகக் கருதப்படும் சந்தலமரக்கடத்தல் வீரப்பனின் மற்றொரு சகாவும் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டதாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீரப்பனின் வலது கை என்க்கருதப்படும் கோவிந்தன் என்பவரே கைது செய்யப்பட்டதாகவும் தமிழ்நாட்டு அதிரடிப்படையினர்மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இக்கைது இடம் பெற்றதாகவும் பொலிஸார் தரப்பில் மேலும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளையில், வீரப்பனின் நெருங்கிய சகாவான மாறன் என்பவர்கடந்தவாரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே (க-7

## சுட்டுக் கொலை

(வாஷிங்டன்)

மெக்ஸிக்கோவில் இனந் தெரியாத ஆயுததாரிகளால் சுமார் 20 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதுடன். மூவர் காயமடைந்துள்ளனர்.

இக் கொலைக்கான காரணங்கள் எதுவும் தெரியவில்லை. (செ

## ஏழு பேர் பலி

(புதுடில்லி)

ஆந்திரப் பிரதேசத்தில் ட்றக் வண்டியும் லொறியும் மோதிக் கொண்டதில் 5 பெண்கள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 30 பேர் காயமடைந்துள்ளனர். (உ-07)

## விமான நிலையத்தில் ஆயிரத்து 100 பாம்புகள்

(கோலாலம்பூர்)

மலேசியாவில்கோலலாம்பூர் விமான நிலையமருகே சாககுகளில் கட்டி வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 100 பாம்புகளை வனத்துறை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்

இவை மருத்துவ தேவைகளுக்காக பயன்படுத்துவதற்கெனக் கிழக்காசிய நாடுகளுக்கு அனுப்பப்படும் வகையில் எடுத்துவரப்பட்டனவெனவும் இவற்றைஎடுத்துச் செல்வதற்குரிய பத்திரத்தை கொண்டு செல்லாதகாரணத்தால் பாம்புகளை கைவிட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது. (உ-7)

# பிலிப்பைன்ஸின்ஜனாதிபதிஎஸ்ராடா நீதிமன்றில் வழக்கறிஞர் உரை

(மணிலா)

பிலிப்பைன்ஸ்ஸின் முன்னாள் ஜனாதிபதி ஜோஸப் எஸ்ராடாபதவிவிலகுவதற்கு எந்தவொரு ராஜினாமாக் கடிதத்தையும் உத்தியோகபூர்வமாக இன்னும் சமர்ப்பிக்கவில்லை.

அவரே தற்போதும்ஜனாதிபதிஎன்றுஎஸ்ராடாவின்வழக்கறிஞர் கடந்த வியாழனன்று பிலிபபைன்ஸ் உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது, தற்போது எஸ்ராடா விடுமுறையிலிருக்கிறார் அவரதுகடமைகளை செய்வதற்கு பதில் ஜனாதிபதியாக அரோயோ செயற்படுகிறார் அவ்வளவே என்று கூறியுள்ளார்.

பிலிப்பைன்ஸில்ஜனாதிபதியாக அரோயோசெயற்படும் அதேவேளை நாடு யாரை ஜனாதிபதியாகஏற்றுக்கொள்வது என்ற விசாரணைகளில் ஈடுபட்டிருந்த 15 நீதியரசர்களில் ஒருவர் எஸ்ராடாவின் சட்டத்தரணியை இது தொடர்பாக கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். (உ-9)

## அதிருப்தியை வெளியிட இப்படியும் ஒரு வழி

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் வசிக்கும் சிறுபான்மையினரான இந்துக்கள் மீதும், சீக்கியர் மீதும் மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகளை மத்திய அரசு கட்டுப்படுத்தத் தவறியதைக் கண்டித்து கடந்த வியாழனன்று காங்கிரஸ் கட்சி இளைஞர்கள் மொட்டையடித்து தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்தின் தலைநகர் சண்டிகாரில் இளைஞர்கள் மொட்டையடித்து, மத்திய அரசின் மீதான தமது திருப்தி இன்மையை இவ்வாறு அமைதியான முறையில் தெரிவித்துள்ளனர். (உ-9

### அமெ- பிரிட்டன் மீது உலக நாடுகள் கண்டனம்

(பக்தாத்)

ஈராக் மீதான தாக்குதலுக்கு காரணமான அமெரிக்காவையும் பிரிட்டனையும் உலக நாடுகள் பலவும் கண்டித்துள்ளன.

நேட்டோ நேச நாடுகளுடன் ஆலோசனை நடத்தாமல் ஈராக் மீது தாக்குதல்கள் மேற் கொண்டமை குறித்தே அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் மீது உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. (செ)

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை

குறள்

வலம்புரி

## அவலம் நீங்குமா?

யாழ். குடாநாட்டு மீனவர்கள் கடந்த 20 வருடங்களாக ''நாட்டுக்கொரு மழை நமக்கு இரண்டு மழை'' என்பது போல் இரண்டு வகைத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அதில் ஒன்று வடக்குக் கிழக்கு வாழ் தமிழ்மக்கள் அனைவரும் தத்தம் வாழ் நிலங்களில் அனுபவித்து வரும் துன்பம். மற்றயது தொழிலுக்காகச்செல்லும் போது கடலில் அனுபவிக்கும் துன்பம். இவ்வாறு குடாநாட்டு கடற்றொழிலாளர்களின் வாழ்வு துன்பத்திலும், ஏக்கத்திலுமே கழிந்து செல்கிறது.

நேரவரையறை, ஊரடங்குச் சட்டம், கடல் எல்லை வரையறை என்று மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளால் அவர்களின் பொருளாதாரம் மிகமிக மோசமடைந்துள்ளது. இதனால் மீனவக் குடும்பங்கள் வறுமையின் பிடிக்குள் சிக்குண்டு பெரும் கஷ்ரத்தை எதிர் நோக்கியுள்ளன.

இதுதவிர கரையோரப் பகுதிகளை அண்டியதாக நடத்தப்படும் ஷெல் தாக்குதல், விமானக் குண்டுத் தாக்குதல் போன்றவற்றால் கடற்றொழிலாளர்களின் இல் இடங்கள் சேதமடைந்து விட்டன இதனால் மழையிலும், வெயிலிலும் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது.

இந் நிலையில் வடூடக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கடற்றொழிலாளர்களின் பிரச்சினை குறித்து மாநாடென்றை நடத்த முன் வந்திருப்பது மனதிற்குஆறுதல் அளிப்பதாகவுள்ளது.

இம் மாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகள் மீனவர்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிப்பதாக— தொழிலுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதாக,— அவர்களின் மீன்பிடி உபகரணங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதாக அமைய வேண்டும் அப்போது தான் கடந்த 20 வருடங்களாக மீனவர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் அதுவரை கடலுக்குச் சென்றவர் மீண்டு(ம்) திரும்புவதை வீட்டு வாசலில் நின்று ஏக்கத்துடன், கடல்வெளியைப் பார்க்கும் தமிழ் பெண்களின் அவலம் நீங்கப் போவதில்லை.

---

### மருத்துவ விளக்கம்

# உயிர் கொல்லி "டெங்கு" நோயை ஒழிப்பதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம் தேவை

ஆ.ஜென்சன் றொனால்ட்
(ஈச்சமோட்டை)

நீண்டகாலமாகவே தென் பகுதியிலிருந்த டெங்குஎனும் உயிர் கொல்லி நோய் தற்போது வடக்கு யாழ்ப்பாணத்திலும் தன் கொடூர வேலையை முடுக்கி விட்டுள்ளது

இந் நோயினால் பலர் மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன், சிலர் இறக்கவும் நேரிட்டது தெரிந்ததே. எனவே, எம் மக்கள் மத்தியில் உயிர்கொல்லி டெங்கு நோய் பற்றிய பூரண அறிவும் அதன் தாக்கம், அதைத் தடுக்கும் வழிமுறைகள் என்பன தெரிய வேண்டியது அவசியமாகின்றது.

இது தென்னாபிரிக்கா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்கு உரித்தான ஒரு நோயாகவே இருந்து வந்தது. எமது நாட்டிற்கு விமானம் மற்றும் கடற்சப்பல் மூலம் மக்களுடன் மக்களாக வந்தி றங்கியிருக்கிறதுஇந்த டெங்கு வைரஸ்.

இரத்தப்பேதியுடன் வரும் கொடூர டெங்கு காய்ச்சல் உலகில் முதன் முதலில் 1956 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டிலே கண்டுபிடிக்கப்பட்டது.

இது இலங்கையில் முதன் முதலில் 1967 ஆம் ஆண்டில் அடையாளங்காணப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களில் எண்மர் இறக்கவும் நேரிட்டது தேசிய டெங்கு ஒழிப்புதினம் இலங்கையிலே 1996 ஆம் ஆண்டு 5 ஆம்திகதி சுகாதார அமைச்சினால் பிரகடனம் செய்யப்பட்டது.

### டெங்கு வைரஸ்

டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் உயிரி ஒரு 'வைரஸ்' ரகத்தை சேர்ந்த நுண்ணுயிரியாகும். ஆபோ (Arbo) குடும்பத்தைச் சேர்ந்தஇந்தவைரஸ் இனங்கள் நான்குவகைக் குரியனவாகக் காணப்படுகின்றன. இவ்வைரஸ் இனங்களின் தொற்றலுக்கேற்ப டெங்குக் காய்ச்சலும் 1,2,3,4 என வகைப்படுத்தப் பட்டிருக்கிறது. இதில் காய்ச்சல் 1,2 ஓரளவு இலகுவில் குணமாகக் கூடியது 3,4 வகைகள் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியவை.

பொதுவாக ஏற்படுகின்ற டெங்குகாய்ச்சலின் நோய்க் காரணியான வைரஸ் பிளேவி விரடே (Flavi virade) என்பதாகும்.

இவ்வைரஸ் ஆனது நுளம்பு எனும் 'காவி' மூலமே பரப்பப்படுகின்றது: டெங்கு வைரஸைப் பரப்பும் இருவகை நுளம்புகள் இனங்காணப்பட்டன.

### காவி நுளம்பு

டெங்கு வைரஸைக் காவிச் செல்லும் நுளம்பினங்களாவன.

1) எடிஸ் எஜிப்டை (Aedes aegypiti)
2) எடிஸ் அல்போபிக்டஸ் (Aedes allbobictus) என்பனவாகும்.

பெண் நுளம்புகளே மனிதக் குருதியை உறிஞ்சுவதன் மூலம் செயல்படுகின்றன.

டெங்கு வைரஸ்காவும் நுளம்பினத்தை வேறுபடுத்தி அறியபின்வரும் இயல்புகள் உதவுகின்றன.

★ இவை பகல் நடமாட்டத்திற்கு உரியன.
★ சிறிய உருவமுடையன.
★ கறுப்பு நுளம்பில் வெள்ளைக் கோடுகள் காணப்படும்.

இவை ஈரலிப்பான சூழலிலே, பற்றைகளுள் பதுங்கி வலைபாழ்நீர்தேங்கி நிற்கும் இருளான நீர் நிலைகளில் இவை விருத்தியடைகின்றன.

எடிஸ் இனத்தைச் சேர்ந்த நுளம்புகள் இடும் முட்டைகள் ஒரு வருடம் கூட உலர்ந்த நிலையிலும் உயிர்ப்பாகஇருக்கக்கூடியன பின் மீண்டும்அதனுடன் நீர் சேர்கையில் பொரித்து நுளம்பாக மாற்றமடைகின்றது.

இந்நுளம்பின் ஆயுட்காலம் இரண்டு வாரங்கள் (14நாட்கள்) மட்டுமே. இவை காலை 6 மணி தொடக்கம் 9 மணி வரையும், மாலையில் 3 மணி தொடக்கம் 5 மணி வரையும் தமது நடமாட்டத்தை வைத்துக்கொள்கின்றன. இந்நுளம்பினத்தை அழிக்க பூச்சி நாசினிகளைப் பாவிப்பது பயனற்றதாக காணப்படுகிறது.

### நோய் பரவுதல்

இது ஒரு வைரஸ் நோய்க் காரணிக்குரிய நோய் வைரஸினால் ஏற்படுத்தப்படும் நோய்களுக்கு சரியான மருந்தெதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

நோயை முற்றாக மருந்தினால் தடுக்க முடியாமைக்குக் காரணம், வைரஸ் உயிரி கணத்துக்குக் கணம் தனது உருவத்தை மாற்றிக்கொண்டிருப்பதுவும், அதன் கலச்சுவர் ஆக்கப்பட்டுள்ள புரதமும் குறித்தவகைக்கு உட்பட்டிராது மாற்றப்படுவதுமேயாகும். டெங்கு வைரஸ் ஆன 'பிளேவியை' உடைய ஒருவருடைய குருதியை 'எடிஸ்' இனத்திற்குரிய நுளம்பு ஒன்று உறுஞ்சும்போது அவரது குருதியுடன் சேர்ந்து நோய்க் காரணி வைரசும் நுளம்பை அடைகின்றது.

இவ்வாறு நுளம்பின் உணவுக் கால்வாயை அடையும் வைரஸ் அதன் குருதிச்சுற்றோட்டத்துடன் கலந்து உமிழ்நீர்ச்சுரப்பியை அடைய ஏறத்தாழ 8 நாட்கள் எடுக்கின்றது. எனவே முதற்தடவையாக டெங்கு நோயாளியைக் கடித்த நுளம்பு வேறொருவரை 8 நாட்களுக்குமுன் கடிக்குமாயின் அவருக்கு அவ்வைரஸ் கடத்தப்படாது. நோயும் ஏற்படாது ஆனால் 8 நாட்களின் பின் நுளம்பின் உமிழ்நீரில் டெங்கு வைரஸ் காணபபடும்.

நுளம்பு கடிக்கும்போது உமிழ்நீரில் கலந்துள்ளடெங்கு வைரஸ் மனிதனின் குருதியுடம் கலக்க நேரிடுகின்றது.

### நோய் நிலைமை

டெங்கு வைரசான 'பிளேவி விரடே' ஒருவரின் குருதியுடன் நுளம்பின் மூலம் கலக்கப்பட்டு நோய்த் தொற்று ஏற்பட்ட பின்னர், ஏறத்தாழ நோய் அறிகுறிகள் தோன்ற 5 தொடக்கம் 6 நாட்கள் எடுக்கின்றது. சாதாரணமாக டெங்குவைரஸில் ஒன்று தொற்று ஏற்படின் எமது உடலில் குருதியிலுள்ள வெண்குழியக் கலங்கள் மூலம் அதனை எதிர்க்க, எதிர்ப்பு இரசாயனச் சுரப்பொன்று குருதியினுள் சுரக்கப்படும். இது 'பிறபொருள் எதிரி' அல்லது நீர்ப்பீடனச் சுரப்பு என அழைக்கப்படும்.

இதன் மூலம் வைரஸ் வெற்றி கொள்ளப்பட்டு நோய் இயற்கையாகவே கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்படுமாயின், தொடர்ந்து 9 மாதங்கள் இவ் எதிர்ப்பு சக்தி நீடிக்கும். அதுவரை முன்பு தாக்கிய டெங்கு வைரஸ் இனம் தாக்குவதால் டெங்கு நோய் (காய்ச்சல்) ஏற்படாது.

ஆனால், இவ் டெங்கு வைரஸைச் சேர்ந்த நான்கு இனங்களில் மற்றுமோர் இனம் அந்நபரை அடைய நேரிடின், நோய் நிலைமை மிக மிக மோசமானதாகத் தோன்றும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

இவ்வாறான டெங்கு நோய் நிலைமைகளின் போது 'இரத்தப்பேதி' ஏற்படுகின்றது. எனவே இரத்தப்பேதியுடன் டெங்கு நோய் ஒருவரில் ஏற்படுகின்றதாயின் அவர் இதற்கு முன் ஒன்று அல்லது சில தடவைகள் இந் நோய்க் காரணி வைரஸினால் தாக்கப்பட்டுள்ளார் என நாம் எதிர்வு கூற முடியும்.

இரத்தப் பேதியுடன் ஏற்படும் டெங்கு நோயாளிகளில் ஏறத்தாள 90% ஆனோர் இதற்குள் அடங்குகின்றனர்.

### சாதாரண டெங்கு காய்ச்சல்

சாதாரண டெங்கு காய்ச்சலானது மூன்று நான்கு தினங்கள் நீடிக்கக்கூடியது. இலகுவில் தானாசவே கட்டுப்பாட்டினுள் வந்துவிடும். இது காய்ச்சல் வகை 1, 2 க் குட்பட்டது. இதன் அறிகுறிகளாக,

- 2 – 3 தினங்கள் கடுமையான காய்ச்சல்,
- தலையிடி அல்லது தலைவலி,
- இடுப்பு மற்றும் ஏனைய உடற்பகுதிகளில் தொடர் வலி,
- வயிற்றுவலி, என்பன காணப்படும்.

### டெங்கு அதிர்ச்சி

இது மிகவும் ஆபத்தான நோய் நிலைமையாகக் காணப்படுகின்றது. இதன் அறிகுறிகளாக,

- திடீர் உடற் குளிர்ச்சி,
- தொடர் மயக்கமும், சோர்வும்,
- உடற்பகுதிகளில் வெளிறல் ஏற்படல்,
- குழந்தைகளாயின் உடல் நீலம்பாரித்தல், போன்றவை காணப்படும். இந் நோயாளிக்குப் போதியளவு ஓய்வு அவசியம். மருத்துவ உதவியையும் நாடி வைத்திய ஆலோசனை பெற வேண்டும்.

### டெங்கு இரத்தப்பெருக்கு

டெங்கு இரத்தப்பெருக்கு அல்லது இரத்தப்பேதி என அழைக்கபபடும் இந்நோய் படு பயங்கரமானது. இதன் அறிகுறிகளாக, பின்வரும் நிலைமைகளை அவதானிக்கலாம்.

- கடுமையான தொடர் காய்ச்சல். இது 39 - 40°C வரை காணப்படும்,
- உடல் களைப்புறல் மற்றும் அமைதியின்மை,
- உடலின் பகுதிகளில் தோலுக்குக் கீழாக வட்ட வட்ட இரத்தத் தழும்புகள் தோன்றும்,
- வாந்தியின் போது இரத்தமும் கலந்து கபிலமாக வெளியேறும்,
- மூக்குச் சிந்தும் போது இரத்தம் வெளிவருதல்,
- முரசிலிருந்து பல் இடுக்குகளினூடாக இரத்தம் கசிதல்,
- கண் சிவப்பு நிறமாதல்,

இந்நோய் நிலைமைகள் பலவோ, சிலவோ தென்படின், காலதாமதமின்றி வைத்திய உதவியை நாட வேண்டும்.

டெங்கு நோய் ஏற்பட்ட ஒருவருக்குகாய்ச்சல் ஏற்பட்டு திடீரென அது விடுமயின், அவர் பூரண குணமடைந்து விட்டார் என உறுதியாகக் கூறமுடியாது அவரது உடல் நிலைமைகளைத் தொடர்ந்து கவனமாக அவதானிக்க வேண்டும்.

- உடல் வெளிறிக் காணப்படல்,
- இலேசான வியர்வை வெளியேறல்,
- சருமத்தில் குளிர்ச்சி ஏற்படல்,
- நாடித்துடிப்பு அல்லது இதயத்துடிப்பு வேகம் அதிகமாக இருத்தல்.

போன்ற நிலைமைகள் தென்படுமாயின் வீட்டில் வைத்திராது உடனடியாக நோயாளியை மருத்துவமனையில் சேர்த்தல் வேண்டும்.

### நோய்க் கட்டுப்பாடு

டெங்கு காய்ச்சலைப் பரப்பும் டெங்கு வைரஸான 'பிளேவி விரடே' (Flavi Virade யைப் பரப்பும், எடிஸ்' நுளம்பு வகைள் பொதுவாக தூய அசைவற்ற இருளான இடத்திலுள்ள நீர் நிலைகளிலேயே பெருக்கமடைகின்றன

அத்துடன் இந் நுளம்புகளின் முட்டைகள் உலர்ந்த நிலையிலும் ஏறத்தாள ஒரு வருடமளவிற்குப் உயிர்ப்பான நிலையில் காணப்பட்டு, பின்னர் நீர் இதனுடன் சேரும் போது (தகுந்த சூழலில்) குஞ்சு பொரித்து நிறைவுடலி நுளம்புகளாக வெளி வருகின்றன.

எனவே, இவை பருவ மழை காலங்களில் பெருகுவதைக் கட்டுப்படுத்தி விட்டு பின்னர் நாம் கவனிக்காது விடுவோமாயின் இந் நுளம்பின் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியாது போய் விடும்.

இந் நோயை முற்றாக ஒழிக்க வேண்டுமாயின், தடுப்பு நடவடிக்கைகளை பருவமழைகாலங்களில் மட்டுமல்லாது வருடத்தின் ஒவ்வொரு நாளுமே விழிப்பாக இருந்து மேற்கொள்ள வேண்டும்.

இந் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த பின்வரும் முறைகளைத் தொடர்ந்து கையாள வேண்டும்.

- வெறும் தகரப்பேணிகள், சிரட்டைகள், போத்தல்கள், சிறிய மூடிகள், தயிர்ச்சட்டிகள், தேவையற்ற பாத்திரங்களை மழைநீர் தேங்காத வண்ணம்உடைத்து அல்லது கவிழ்த்து விடுதல்,
- இள்நீர் குடித்த கோம்பைகள், குரும்பைகள் போன்றவற்றை சிறு சிறு துண்டுகளாக வெட்டி விடுதல் அல்லது குழிதோண்டிப் புதைத்து விடுதல்,
- வீட்டுக் கூரைகளில் நீர் வடிந்து செல்ல அமைந்திருக்கும் பீலிகளில் இலைகள் தேங்காதவாறு அகற்றி விடுதல்,
- நீர் வடிந்து செல்லும் வடிகால்களில் குப்பை கூழங்கள் தேங்காதவாறு அகற்றி நீரை வடிந்தோட அனுமதித்தல்,

(2-ம் பக்கம் பார்க்க)

கண்ணைக்கவரும் தங்க நகைகளை
உங்கள் எண்ணம் போல்
செய்து தருபவர்கள்
**சாரங்கா நகைமாடம்**
177/4. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-1503]

# சமாதானப் பேச்சை விரைவுபடுத்த அரசாங்கத்தை வலியுறுத்துக!

## புலிகளின் பிரமுகர் சுதா வேண்டுகோள்

வன்னியில்] வாழுகின்ற தமிழ் மக்களின் அவலங்களையும், சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பாக விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டையும், அறிவதற்கு மேற்கொண்ட எமது விஜயம் வெற்றியளித்துள்ளது என வடக்கு கிழக்கு மகாசங்க நாயக்கப் சியம்பல கஸ்பவ விமலசார தேரர் எமது வவுனியா நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னியில் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து பேசிய போது, விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தையில் ஆர்வம் கொண்டிருப்பதை அறிய முடிந்தது. அத்துடன் விடுதலைப்புலிகளின் பிரமுகர் சுதா சமாதானப் பேச்சு வார்த்தையை எவ்வளவு விரைவாக ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அரசு ஆரம்பிக்க எம்மைத் தூண்டுதல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாகவும், நல்லெண்ண நோக்கிலேயே யுத்த நிறுத்தம் மேற் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் பராமரிப்பில் 25 தொடக்கம் 30 வரையிலான யுத்தக் கைதிகள் உள்ளனர். இவர்களை நல்ல முறையில் பராமரித்து வருவதாகவும் சில மாதங்களுக்கு முன்னர் வவுனியா மாவட்ட குளத்தில் மீன் பிடித்த இரு சிங்கள மீனவர்களும் தமது பாதுகாப்பில் உள்ளதாகவும், அவர்கள் இருவரையும் விரைவில் விடுதலை செய்வதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்ததாகவும் விமலசார தேரர் கூறினார்,

இது இவ்வாறிருக்கஇரத்தினபுரி மறை மாவட்ட ஆயர் அதிவண. மல்கம் ரஞ்சித்தும் மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு ஜோசப்பும் மடுவில் தங்கியுள்ளனர். இவர்கள் விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் கரிகாலன் ஆகியோரை சந்திப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### புலிகளின் - - -

பாகேசோமானந்த தேரர் ஆகிய முக்கிய பௌத்த பிக்குகளும் இக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

நேற்று காலை வவுனியாவில் இருந்து பிரமணாங்குளம் ஊடாக சென்ற இவர்களை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் வரவேற்று மடுவுக்கு அழைத்துச்சென்றனர்.

மடுத்திருப்பதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை முக்கியஸ்தர் சுதாவையும்,மற்றும் இரு பிரதிநிதிகளையும் சந்தித்து பேசியுள்ளனர் இவர்களது பேச்சு சுமார் 4 மணித்தியாலங்கள் வரை நீடிதத்து.

பேச்சு வார்த்தையின் பின் விடுதலைப் புலிகள் சமாதானத் தூதுக் குழுவினரை பிரமணாளம் குளம் வரை அழைத்துச் சென்று வழி அனுப்பிவைத்தனர். (வ)

### பாராளுமன்ற - - -

ஜெயதிஸ்ஸ ரணவீர, குணசேகரம் சங்கர், மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மகிந்த சமரசிங்க, சுஜந்த புஞ்சிநிலமே, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ ஆனந்தசங்கரி உட்பட 10 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

## ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வினைக் கண்டித்தும் சம்பள உயர்வு கோரியும் ஜே. வி. பி யினர் இன்று அரச திணைக்களங்களுக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நாடு தழுவிய ரீதியில் தொடர்ந்து நடைபெறுமென ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார். (ம)

### பயங்கரவாத - - -

தப்பட்டு தண்டனை வழங்குதல்.

★ பொலிஸாருக்குரிய அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டு கைது செய்யும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

★ பயங்கரவாத அமைப்பிற்கு நிதி சேகரிப்போர், நேரடியாக பயங்கரவாத அமைப்பிற்கு உதவுவோர் கைது செய்யப்படுதல்.

★ வெளிநாடுகளில் தாக்குதல் நடத்திய பின்னர் அந்நாட்டிற்குச் செல்ல முடியாதென காரணங்கூறி பிரித்தானியாவில் தங்குவதற்குத் தடை.

(1973 இல் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் பிரகாரம் மேற்கூறப்பட்ட காரணத்தைக் கூறி பிரிட்டனில் தங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.)

★ இந்தச் சட்டத்திற்கு அமைய விலங்கு உரிமைகளுக்கு எதிராகச் செயற்படும் அமைப்புக்களும் தடைசெய்யப்படும்.

★ கணணியில் 'சைபர்த்தாக்குதல்' நடத்திஅரசிற்கு எதிராகச் செயற்படும் அமைப்புக்களையும் தடை செய்தல்,

★ பட்டியலில் இடம்பெறும் அமைப்புக்களில் உறுப்பினராக இருப்பது, நிதி உதவி அளிப்பது,அமைப்பின் இலச்சினை அல்லது சின்னத்தைப் பிரபல்யப் படுத்துவது, குறித்த அமைப்புக்கு ஆதரவாக மூன்று அல்லது அதற்கு மேற்பட்டோர் கூடிப் பேசுவது போன்றவற்றிற்கு தடை விதித்தல்;

இதே வேளை இச் சட்டம் குறித்து கருத்து தெரிவித்துள்ள பி.பி.சியின் செய்தியாளர் ஜோண் ரெக் பிரித்தானியாவில் வாழும் முஸ்லிம் மக்களை இச் சட்டம் கோபமடையச் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

### விடுதலை - - -

தேச பயங்கரவாத அமைப்பாக அல்லது பிரித்தானியாவுக்கு எதிராகச் செயற்படுமானால் அப் பட்டியலில் புலிகள் அமைப்பு இடம்பெற வாய்ப்புண்டு. ஆனால் விடுதலைப் புலிகளை பிரித்தானியாவுக்கு எதிராகச் செயற்படும் அமைப்பு என எவரும் கருதுவரா? என நான் நினைக்கவில்லையெனத் தெரிவித்துள்ளார்.

### பட்டியல் - - -

புக்களும் பல்கலைக்கழக மாணவ சமுதாயமும் குரல் எழுப்பியதைத் தொடர்ந்து பிரித்தானிய அரசின் செயற்பாட்டில் தற்காலிக தாமத நிலை ஏற்பட்டுள்ளமை சமாதானத்தை விரும்பும் சகலருக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

**பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் வெளியிடப்பட்ட விபரம்.**

பிரித்தானிய பாராளுமன்றத்தால் பயங்கரவாதத் தடைச்சட்டம் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்ட போதும் தடைசெய்யப்படவுள்ள பயங்கரவாத அமைப்புகளின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்படவில்லை.

பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சுமார் 14 அமைப்புகள் இடம் பெற்றுள்ளதாகவும் - முக்கியமாக ஐ.ஆர்.ஏ, காஷ்மீர் தீவிரவாதக்குழு, உட்பட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பும் சேர்க்கப்படலாம் என பல்வேறு ஊகங்கள் வெளியாகியிருந்தது.

**பாராளுமன்ற கட்டடத்தின் முன்னால் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்**

பயங்கரவாத தடைச் சட்டம் பாராளுமன்றத்தில் நேற்றுசமர்ப்பிக்கப்பட்போது லண்டனில்உள்ள பாராளுமன்றக்கட்டடத்திற்கு முன்னால் இலண்டன்வாழ் தமிழர்கள் குழுஎன்னும் பெயரிலான அமைப்பினர் விடுதலைப்புலிகளைத் தடை செய்யக் கூடாதெனவும் பயங்கரவாத தடைச்சட்டத்தை வாபஸ்பெறுமாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர்.

பாராளுமன்றத்தில் பயங்கரவாததடைச்சட்டம்சமர்ப்பிக்கப்பட்டபின்பும்பயங்கரவாதிகள்பட்டியலில்விடுதலைப்புலிகளைசேர்ப்பதா இல்லையா என்பதை பிரிட்டிஷ்உள்நாட்டமைச்சே தீர்மானிக்கும் என்றும் அதனைதீர்மானிக்கும்கால அட்டவணையை இப்போது கூறமுடியாதென்றும் பிரிட்டிஷ்இராஜதந்திரஅதிகாரி ஒருவர்கருத்து வெளியிட்டுள்ளார். (வ)

மங்கையர் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள
**நியூ நகுலா ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[கி-1500]

விடுதலைப் புலிகளைத் தடைசெய்தால் அவர்கள் அதனை ஆட்சேபித்து நீதிமன்றம் செலவார்கள். அதன் பின் தடை செய்யும் விடயத்தில் நீதிமன்றமே இறுதித் தீர்மானம் எடுக்கும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

**கேள்வி:-** இவ் விடயம் குறித்து விளக்கமின்றியா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரித்தானியாவிற்கு அழுத்தம் கொடுத்தார் என்று அமைச்சரிடம் கேட்டபோது.

**பதில்:-** வெளிவிவகார அமைச்சர் எந்த அடிப்படையில் அழுத்தம் கொடுத்தார் என்பது எனக்கு தெரியாது இந்த விடயத்தை வெகுஜன ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரமாகவே நான் அறிந்துகொண்டேன் அமைச்சர் பட்டி வீரக்கோன் பதிலளித்துள்ளார்.

**கேள்வி:-** விடுதலைப் புலிகள் பிரித்தானியாவில் தடை செய்யப்படுவதிலிருந்து தப்புவதற்காகவே யுத்த நிறுத்தம் செய்தார்கள் என லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

**பதில்:-** விடுதலை புலிகளைத் தடைசெய்வது போன்ற விடயங்களை தீர்மானிப்பது பொதுமக்கள் அல்ல விடயம் தெரிந்த தகுதி வாய்ந்த அதிகாரிகள் தான்தீர்மானிக்கின்றார்கள். இப்படியான காரணங்களுக்காக அதிகாரிகள் ஏமாறக் கூடியவர்கள் அல்ல.

**கேள்வி:-** அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகளை தடை செய்துள்ளன: ஆனால்பிரித்தானியாவில்புலிகளுக்கு தடை விதிக்காதநிலை இலங்கைக்கு பின்னடைவைத்தருமல்லவா.

**பதில்:-** அதனை பின்னடைவு என்று கூறமுடியாது பிரித்தானியா இதனைச் செய்யும் போது அவர்களுடைய தேவைகள் சட்ட வரம்புகளுக்கு உட்பட்டுத்தான் செய்ய நேரிடும் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். இந்நிலையில் இவ் விடயம் தொடர்பாக மகஜர்கள் அனுப்பி வைப்பதோ அல்லது வலியுறுத்துவதோ அர்த்தமற்றது. என்றும் அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

### பொங்குதமிழ்- - -

நிகழ்வு நிறைவு பெறும்;

இதே வேளை யாழ் பல்கலைக் கழகசமூகம் கடந்த மாதம் 17 ந்திகதி இவ்எழுச்சி நிகழ்வை பெரும் எடுப்பில் நிகழ்த்தியமையும் இங்குகுறிப்பிடத்தக்கது. (இ-12

அதி நவீன
கருவிகள் மூலம்
ஒலிப்பதிவு செய்திடவும்
வீடியோ, ஸ்ரூடியோ,
மணப்பந்தல்
சேவைகளுக்கும்,
**மேகாஸ் வீடியோ அன் ஓடியோ**
23, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1495)

**ஸ்ரீ செல்வா**
(யாழ்ப்பாணம்)
சரத்குமார்.மீனா
நடித்த
**ரிஷி**
10-30, 2-30 (ப நே)
(புதிய வெளியீடு)
CD பிரதி
(கி 1482)

## மரண அறிவித்தல்

### கனகர் கந்தசாமி

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த கனகர் கந்தசாமி நேற்றுக் கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்றவர்களான சின்னப்பெடியன் கனகர்-செல்வம் தம்பதிகளின் அன்பு மகனும், சற்குணவதியின் அன்புக் கணவரும், மங்கையற்கரசியின் அன்புச் சகோதரனும், வானதி, வர்ணன், கமல், கஜேந்திரன், கஜேந்தினி, ரோபா, சோபிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் சுசிலா, ஆனந்தி, அன்ரனி (ஈசன்) பிரதீபகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனகன் துவாரகன், டக்ஸன், கயல்விழி, பிரசாந்தன், ஆசா, கம்சிகா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஊர்காவற்றுறையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

வர்ணன் (திவாகர்)
(மகன்)

### தவறிவிட்டது

பரிசளிப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சுன்னாகத்திற்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 'வலம்புரி' காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

க.இரத்தினசிங்கம்
ஐயனார் கோவிலடி,
சுன்னாகம்.

தகவல்;
ச.கோபாலகிருஷ்ண மூர்த்தி

**திருத்தகம்**

சகல விதமான நீர் இறைக்கும் இயந்திரங்களையும்
குறைந்த விலையில் திருத்த,

மல்லிகா நீர் இறைக்கும் இயந்திரம்
திருத்தும் இடம்

யாழ் பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.

உரிமையாளர்:
(மல்லி)

(2544)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது;